[10th March 1969

Industrial Estate at Kappalur

* 176 Q.—THIRU N. R. THIAGARAJAN (on behalf of THIRU M. AIYASWAMY) : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state the present stage of the proposal to establish an Industrial Estate at Kappalur in Madurai district?

கப்பலூரில் தொழிற்பேட்டை அமைத்தல்

திரு. என். ஆர். தியாகராஜன் (திரு. எம். அய்யாசாமி சார்பில்) : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

மதுரை மாவட்ட, கப்பலூரில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : மதுரைக்கு அருகாமையில் உள்ள கப்பலூரில் அபிவிருத்தி செய்யப்பட்ட நிலங்கள் கொண்ட பேட்டை ஒன்றை நிறுவுவதற்கான நில ஆர்ஜித வேலை அநேகமாக முடிந்து விட்டது. இப்பேட்டைக்கான மனை பிரிவுக் குறிப்பு தயாராகிவிட்டது. சாலைகள் அமைத்தல், கழிவு நீர் போக்கு, குடி தண்ணீர் வசதி செய்தல் போன்ற அபிவிருத்தி வேலைகளுக்கான மதிப்பீடும் தயாராகிக் கொண்டிருக்கிறது.

Honorary Magistrates

* 177 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether there is any proposal to do away with the system of appointment of Honorary Magistrates in Tamil Nadu; and

(b) if so, the reasons therefor?

கவுரவ மாஜிஸ்ட்ரேட்டுகள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில் கவுரவ மாஜிஸ்ட்ரேட் நியமிக்கும் முறையைக் கைவிடும் உத்தேசமுண்டா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Uneconomic Railway Lines

* 178 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) the railway lines in this State that inflict a loss on the Central Government; and

10th March 1969]

(b) whether a statement containing the particulars of income and expenditure of the lines will be placed on the Table of the House?

நட்டம் உண்டாக்கும் இரயில் பாதைகள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில் மத்திய அரசுக்கு நட்டம் உண்டாக்கும் இரயில் பாதைகள் எவை எவை ?

(இ) அப்பாதைகளின் வரவு-செலவு விபரம் சபையில் வைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட கிளை இருப்புப்பாதைகள் விரயத்தில் செயல்படுவது காரணமாக அவற்றை இந்திய அரசு மூடிவிட கருதியுள்ளது. இரயில்வே வாரியம் 1965-66-ம் ஆண்டில் கீழ்க்கண்டவாறு விரயம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளது :—

	(ரூபாய் லட்சத்தில்.)
(1) மேட்டுப்பாளையம்—உதகமண்டலம்	27.71
(2) மாயூரம்—தரங்கம்பாடி	2.11
(3) போளம்—காரைக்கால்	1.76
(4) நீடாமங்கலம்—மன்னார்குடி	1.57

(இ) மேற்சொன்ன இருப்புப்பாதைகளின் வரவு-செலவுப் பற்றிய முழு விவரங்கள் இவ்வரசாங்கத்திடம் இல்லை. அவ் விவரங்களை அனுப்புமாறு இரயில்வே வாரியத்திற்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது.

திரு. வி. தங்கபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்த ரயில்வே பாதையில் நஷ்டம் ஏற்படுகிறது என்பதற்காக மத்திய அரசு அவைகளை மூட வேண்டுமென்று வற்புறுத்துவதை தமிழக அரசு மறுத்து அந்த ரயில்வே பாதைகளை மூடக் கூடாது என்று தெரிவித்தது. மீண்டும் தொடர்ந்து அதை வற்புறுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : நம்முடைய மாநில அரசாங்கம் ஏற்கனவே மத்திய அரசாங்கத்திற்கு அந்த இருப்புப் பாதைகளை அப்புறப்படுத்தக் கூடாது என்று எழுதியிருக்கிறது. மீண்டும் தொடர்ந்து வற்புறுத்தும்.

Division of Wards in Dindigul Municipality

* 179 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the High Court cancelled the division of wards of Dindigul Municipality; and

(b) if so, the action taken by the Government thereon?